DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 201/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினேஷ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.03.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது காகலனி காலனி தெருவில் வசித்து வருகிறேன். அ.சா.1, 2 எனது தாய் தந்தையர் ஆவார். இறந்து போன அய்யப்பன் எனது அண்ணன் ஆவார். எனது அண்ணனுக்கு ரெஜிபானி, கவுதமி ஆகியோரிடம் உறவு இருந்தது. அது சம்மந்தமாக எனது தந்தை கண்டித்தார். என் தந்தை கண்டித்ததை என் அண்ணன் கேட்கவில்லை. 27.03.2021 அன்று 10.30 மணிக்கு கருவை காட்டில் இறந்து இருந்தார். அந்த கருவை காடு யாருக்கு சொந்தம் என்று எனக்கு தெரியாது. அந்த கருவை காட்டின் பக்கத்தில் யார் வீடு இருந்தது என்று தெரியாது. இறந்த எனது சகோதரரின் உடலை நான் சென்று பார்த்தேன். நான் பார்த்த போது போர்வையால் தூக்கு மாட்டி இறந்து இருந்தார். கால் தரையில் இருந்தது. நாங்கள் பார்த்த பின்பு ஸ்டாலின் புகார் கொடுத்தார். அதன் பின்பு காவல் துறையினர் வந்தார்கள். எனது அண்ணனின் உடலை போஸ்மாடத்திற்கு அனுப்பினார்கள். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரினை ஸ்டாலின் கொடுக்கவில்லை உங்களது தந்தை தான் கொடுத்தார் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் அண்ணன் இறந்து போன அய்யப்பனுக்கு ரெஜிபானி, கவுதமியிடம் என்ன பழக்கம் என்று எனக்கு நேரடியாக தெரியாது. அவர்களுக்குள் எந்தவிதமான பழகமும் இல்லை என்றால் சரிதான். என் அய்யப்பன் பிரேதம் எங்கள் வீட்டிற்கு வந்த பிறகு தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் காட்டு கருவை தோப்பிற்கு போகவில்லை என்றும் அய்யப்பன் பிரேதம் அங்கு கால் தரையில் பட்டு தொங்கவில்லை என்றும், அதனை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 201/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தையல்நாயகி | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.03.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது காகலனி காலனி தெருவில் வசித்து வருகிறேன். இறந்து போன அய்யப்பன் எனது மகன் ஆவார். அ.சா.1 எனது கணவர் ஆவார். எனது மகன் செறுநல்லூர் அங்காடியில் உதவியாளராக வேலை பார்த்து வந்தார். எனது மகன் வேலை பார்க்கும் போது யார் உடன் என் பழகம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. எனது மகன் 27.03.2021 அன்று இறந்தார். எங்களுக்கு ஸ்டாலின் என்பவர் எனது மகன் இறந்துவிட்டதாக போன் மூலம் தகவல் சொன்னார். நான் அங்கு சென்று பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் ஸ்டாலின் புகார் கொடுத்தார். பிரேதம் வீட்டிற்கு வந்தது. எனது மகன் மாலை 7.00 மணிக்கு வீட்டை விட்டு சென்றார். பிங் கலர் கட்டம் போட்ட சட்டை , கைலி எனது மகன் அணிந்திருந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதும் சொல்லவில்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி

வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

உங்களை ஆய்வாளர் விசாரணை செய்த போது எனது மகன் ரெஜிபானி வீட்டில் கொல்லை புறம் உள்ள கருவை காட்டில் உள்ள கருவை மரத்தில் பாதி கிழிந்த போர்வையினால் கழுத்தில் முடிச்சு போடப்பட்டும், கால்கள் தரையில் பட்டும் இறந்து கிடந்தார் என்றும், அவர் SKC ஜட்டியை தவிர எந்த ஆடையும் இல்லாமல் இருந்தார் என்றும், அதனை பார்த்த பின்பு கீழ்வேளூர் காவல் நிலையத்தில் எனது கணவர் புகார் கொடுத்தார் என்றும், அதற்கு பின்பு ரெஜிபானி, கவுதமி ஆகியோரிடம் எனது மகனுக்கு கள்ள தொடர்பு இருந்தது என்றும், அதை நாங்கள் கண்டித்தும் அவர் தொடர்ந்து அவர்களுடன் கள்ள தொடர்பில் இருந்தார் என்றும், எனது மகன் இறப்பிற்கு ரெஜிபானி மற்றும் கவுதமி ஆகியோர் தான் காரணம் என்றும் கூறிவிட்டு எதிரிகள் கேட்டு கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது மகன் பிங்க் கலர் கட்டம் போட்ட சட்டையும், கைலியும் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. ஸ்டாலின் என்பவர் எங்களுக்கு போன் மூலம் தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 201/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தெட்சிணாமூர்த்தி | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.03.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது காகலனி காலனி தெருவில் வசித்து வருகிறேன். இறந்து போன அய்யப்பன் என் மகன் ஆவார். செறுநல்லூார் அங்காடியில் வேலை பார்த்து வந்தார். அவருக்கு யார்கூட பழக்கம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 27.03.2021 ம் தேதி எனது மகன் இறந்துவிட்டார். போன் மூலமாக இரவு 10.00 மணிக்கு ஸ்டாலின் என்பவர் சொன்னார். நான் சென்று பார்த்த போது கருவை மரத்தில் தூக்கு மாட்டி இறந்து இருந்தார். அந்த கருவை மரம் யார் இடத்தில் இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் இரவு 10.30 மணிக்கு நான் சென்று பார்த்தேன். எத்தனை பேர் என்னுடன் வந்தார்கள் என்று எனக்கு புரியவில்லை. எனது மகன் தூக்கு மாட்டி இருந்த போது பாதம் தரையில் லேசாக தொட்டு கொண்டு இருந்தது. அதன் பிறகு நான் நிலைதடுமாறிவிட்டேன். நான் கீழ்வேளூர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு கண்ணு தெரியவில்லை. அந்த புகார் நான் கொடுத்த புகார் தான். நான் கொடுத்த புகாரில் என் பிள்ளை

கொலை செய்யப்பட்டான் என்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரில் யார்மீது சந்தேகம் இருக்கிறது என்று சொல்லியிருந்தேன். என்னை காவல் அதிகாரிகள் விசாரணை செய்தார்கள். என் மகன் இறந்ததற்கு பணம் தேவை என்று மனு கொடுக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

உங்களை ஆய்வாளர் விசாரணை செய்த போது எனது மகன் அய்யப்பன் செறுநல்லூரை சேர்ந்த ஆனாந்தன் மனைவி ரெஜிபானி மற்றும் அன்பரசன் மனைவி கவுதமி ஆகியோர்களுடன் தவறான உறவு வைத்து கொண்டு இருந்தார் என்றும், அது ஊருக்கே தெரிந்து இருந்தது என்றும், இதனை நான் பல முறை கண்டித்தும் எனது மகன் அய்யப்பன் என் பேச்சை கேட்காமல் தொடர்ந்து கள்ள உறவில் இருந்து வந்தார் என்றும், ஸ்டாலின் என்பவர் இது சம்மந்தமாக தகவல் சொல்ல நான் சென்று பார்த்த போது ரெஜிபானி வீட்டில் கொல்லை புறம் உள்ள கருவை தோப்பில் உள்ள கருவை மரம் ஒன்றில் பாதி கிழிந்த போர்வையினால் கழுத்தில் முடிச்சிபோட்டு இருந்தது என்றும், உடலில் ஜட்டி தவிர வேறு எந்த உடையும் இல்லை என்றும், என் மகன் வீட்டில் இருந்து செல்லும் போது இளம் மஞ்சல் நிற சட்டையில் ஊதா கட்டம் போட்ட முழு கை சட்டை மற்றும் ஊதா மற்றும் சாம்பல் கோடு போட்ட ஊதா நிற கைலி போட்டிருந்தார் என்றும், பிட்டம் தரையில் இருந்து அரையடி உயர்ந்த நிலையில் இருந்தார் என்றும், இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் ஒரு புகார் மனு கொடுத்தேன் என்றும், அந்த புகாரில் ரெஜிபானி, கவுதமி, ஆகியோர் மீது சந்தேகம் இருப்பதாக கூறிவிட்டு எதிரிகள் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ஸ்டாலின் என்பவர் எனக்கு போன் மூலம் தகல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் என் மகன் கருவை காட்டில் தொங்கினார் பாதம் தரையில் படுவதாக இருந்ததை நான் பார்கவில்லை என்றாலும், எனது மகன் பிரேதம் என் வீட்டிற்கு வந்த பிறகு தான் நான் பார்தேன் என்றாலும் சரியல்ல. நான் ஏழ்மையான சூழ்நிலையில் இருப்பதால் என் மகன் இறந்தற்காக அரசாங்கத்திடம் உதவி தொகை கேட்பேன். நான் முதல் விசாரணையில் சில சங்கதிகளை பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.